**சுருக்கம்**

உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை – மானியக் கோரிக்கை 2019 – 2020 – மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ரூ. 8.00 கோடி மதிப்பீட்டில் 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகு கட்டைகள் கொள்முதல் செய்வதற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (அ1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 88

நாள்: 14.08.2019
விகாரி வருடம், ஆடி – 29
திருவள்ளுவர் ஆண்டு – 2050

படிக்க:–

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களின் கடிதம் எண். Rc.No. QC2/029850/19, நாள். 09.07.2019.

**ஆணை:-**

2019–2020ம் ஆண்டு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட பல்வேறு அறிவிப்புகளோடு கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> **“கிடங்குகள், திறந்த வெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் மற்றும் காற்றோட்டமான வசதி அமைந்திட 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச் செருகு கட்டைகள் (Poly Pallet) 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்”**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சொந்த கிடங்குகள் மற்றும் வாடகை கிடங்குகள், திறந்த வெளி சேமிப்பு மையுங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சேமிக்கப்படும் உணவு தானியங்களை தரைக்கும், உணவு தானிய அட்டிகளுக்கும் இடையே மூட்டை இடைச் செருகு கட்டைகள்

(Poly Pallet) ஈரகாப்பு மரக் கூளங்களாக (Dunnage) பயன்படுத்தும் போது சிறந்த காற்றோட்ட வசதிக்கும், உணவு தானிய பொருட்கள் தரம் குறையாமல் சேமிப்பதற்கும் வழிவகை செய்கிறது என்றும், மொத்தம் 12.5 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளில் 8000 இடைச்செருகு கட்டைகள் கையிருப்பு உள்ளது என்றும் ஒவ்வொரு 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கும் 360 இடைச் செருகு கட்டைகள் தேவைப்படும் நிலையில் ஒவ்வொரு இடைச்செருகு கட்டையும் ரூ.4000/– வீதம் 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச் செருகு கட்டைகள் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கருத்துருவை ஆய்வு செய்து மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக ஒவ்வொரு இடைச்செருகு கட்டையும் ரூ.4000/– வீதம் 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச் செருகு கட்டைகள் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்வதற்கு நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
சென்னை–600 010.

<u>நகல்:-</u>
மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
நிதி (கூ.உ(ம)நு.பா) துறை,
சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
14/8/19.

14.8.19.